


தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராகப் பதவியேற்றுள்ள பி.தர்மசெல்வன் தர்மபுரி மற்றும் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், காமராஜர், டாக்டர் அம்பேத்கர் ஆகியோரின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர், பொறுப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டு தருமபுரி ராமக்கா ஏரி அருகே அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் தனது 14வயதில் தொடங்கிய மொழிப்போர்!

# மீண்டும் திருவாரூரில் தன்னெழுச்சியாய் திரண்ட மாணவர்கள்!

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம்!

திருவாரூர், பிப். 28

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது 14 வயதில் தமிழ் மொழிகாக்க புலிக்கொடி ஏந்தி புறப்பட்ட திருவாரூர் வீதிகளில், ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சிகளால், மீண்டும் தமிழ்நாட்டில் தமிழ் மொழி அழிக்க புறப்பட்டிருக்கும் தீயசக்திகளை எதிர்த்து, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, திருவாரூரில் தன்னெழுச்சியாய் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் திரண்டெழுந்து இந்தித் திணிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மும்மொழிக் கொள்கை என்கிற பெயரால் மீண்டும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. ஆட்சியின் கைகளில் எடுத்திருக்கும் தமிழ்மொழிக்கு எதிரான இந்தித் திணிப்பு கொள்கைக்கு எதிராக கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆலோசனைப்படி, திருவாரூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் தொடங்கி வைத்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ். பகலவன் தலைமை ஏற்றார்.

மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை த.சோழராஜன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் மதி.நெல்சன் மண்டேலா, மதி.முத்துக்குமார், நூருல் அமீன், யோகபாலன், சகுந்தலாதேவி ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

அனைத்து மாணவர்களின் கூட்டமைப்புகள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில், மாவட்டம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், கல்வி ஆர்வலர்கள், தமிழறிஞர்கள் பங்கேற்றனர்.

இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் சி.கே.எஸ்.எழிலரசன், வி.கே.முருகானந்தம், எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி.எடிசன், பி.தாகீர் அலி, வி.வினோத்குமார், உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கல்வியாளர் காலைக் கதிரவன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழகங்களின் நிர்வாகிகள் , கழக தோழர்கள், அனைத்து மாணவ கூட்டமைப்பு இயக்கங்களை சேர்ந்தவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

நகரச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் நன்றி தெரிவித்தார்

### இந்தியை திணிக்கும் பா.ஜ.க அரசைக் கண்டித்து மாணவ இயக்கங்களின் சார்பில்

# அறந்தாங்கியில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## ஆ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, பிப். 28 -

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்ப்பந்திக்கும் பா.ஜ.க அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி தபால் நிலையம் எதிரே நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை தி.மு.க. தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ. கலைச்செல்வன் தலைமை வகித்தார்.

அறந்தாங்கி தி.மு.க. நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.க. சட்ட திருத்தக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. மாணவர் அணி கூட்டமைப்பின் மாநில செயலாளர் பூமிநாதன் கண்டன உரையாற்றினார்

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பொன். கணேசன், சக்தி ராமசாமி, கே.பி.கே.டி. தங்கமணி, அழகு சிதம்பரம், அ.முத்து, அரு.வடிவேலு,

பேரூர் கழக செயலாளர் கே.சி.சிவக்குமார், கணேசன், பழனிக்குமார்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன்.. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நசுருதீன், இரா. தமிழ் ராசா, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செந்தில் வேலன், பழனி குமார், சுற்றுச்சூழல் அணி குமரேசன்,

விளையாட்டு மேம்பாட்டு அணி முன்னாள் கவுன்சிலர் சக்திவேல், மாவட்ட நெசவாளர் அணி பழனி தேவா, மாவட்ட அயலக அணி அப்துல் நாசர், மாவட்ட மகளிர் அணி தொண்டரணி அரசர்குளம் பாத்திமா ஆகியோரும் திமுகவின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும்...

மற்றும் கூட்டணி கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் காங்கிரஸ் கட்சி வீராச்சாமி, நிலையூர் சரவணன், ம.தி.மு.க. மோகன், கம்யூனிஸ்ட் கட்சி கருணாகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி லோகநாதன், மனித நேய ஜனநாயக கட்சி முபாரக் உட்பட பல்வேறு மாணவ அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராஜ பெரியண்ணன் நன்றி தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப. பழனிவேல்

**பிப்ரவரி 28 (2022)**



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடலூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அப்பா அப்பா பல்லாண்டு வாழ்க!



**தே**திகள் கூடி ஒரு தேதிக்கு இனிப்
பூட்டிய மார்ச் 1 தேதி !

பண்பாட்டுத் தலைவர்
மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சேதி !

ஒருமுறை அப்பா என்று
அழைக்கட்டுமா தலைவரே என்றாய்
கலைஞரின் புதல்வா !

நாடே உன்னை அப்பா அப்பா
என்று அழைக்கிறது எங்கள் முதல்வா !

இனம் உயர்கிறது தமிழ் நிலத்தில்
உன் கால்களில் தழும்பு !

கலைஞரின் எதிரிக்கு நீ அவாய்
எரிமலைக் குழம்பு !

அண்ணா வழியில் மதம் மறுக்கும்
பகை அறுக்கும் தலைமை – நீ !

உறங்காத போர்வாள்களை
உருவாக்கும்
தீ உலைக்குழி – நீ !

வி.பி.சிங்குக்கு சிலை எடுத்த சமூக
நீதி – நீ !

நிலவுக்கு வயது கூடுகிறது ஆனால்
இளம் பிறை – நீ !

டெல்லி சுருட்டி வைக்க முடியாத
சூறாவளி – நீ !

அலையும் அலைவரிசையும்
ஆராத்தி எடுக்கும் வலைதளம் – நீ !

மிசா அடக்கு முறையில் நிமிர்ந்தாய்
குருதி சிந்தி !

மு.க.ஸ்டாலின்
மும்மொழியை
எதிர்க்கிறார்
டெல்லியே சிந்தி !

இந்தி எதிர்ப்பு போர் எனில் எழுவார்
தண்ணீரில் கால்களை உந்தி !

கொடி பிடிக்கும் தமிழ் வெறியருக்கு
தலைமையேற்று நிற்பார் முந்தி !

மான்களை காப்பது சிங்கத்தின்
பசியைப் போக்குவது
நிர்வாக நெறி !

எத்தனையோ மருத்துவ உதவி
மனித நேயம்
உன் மனதில் ஒளி !

எல்லோருக்கும் எல்லாம்
உன் ஆட்சியின் முகம் !

பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் நீ
துறை முகம் !

கட்டணமில்லா மகளிர் பேருந்து
பயணத்திட்டம் திட்டமல்ல
திராட்சை வனம் !

மகளிர் உரிமைத் தொகை
தாய் மனம் வாழ்த்துகிறது தினம் !

மழைத்துளியை எண்ணுவதும்
உன் சாதனையை சொல்வதும்
ஒன்றுதான் !

கலைஞர் நினைவிடத்தை இரசிக்கிறது
நிலா நின்று தான் !

அலை நுரைகள் உடையும் ஒலி
பூக்கள் விரியும் ஒலி உன்
புன்னகை !

மினுமினுக்கும்
உன் அழகுக்கு ஈடாகுமா
பொன் நகை !

ஆயுதம் மறு என்றாய்
அறிவுத்தொடு என்றாய் – நீ !

நரிகள் தந்திரம் நொறுக்கும்
கலைஞர் மந்திரம் – நீ !

வில்லை உடைப்பதல்ல வில்லை
தொடுப்பது தமிழன் வீரம் என்றாய் – நீ !

திருக்குவளையில் எழுந்து
காஞ்சிபுரம் வழியாக வரும்
ஈரோட்டுப் பாதை – நீ !

அதிகாரத்தை
மிரட்டிய தியாகத்தின் காதை – நீ !

கடல் தாண்டி நாரைகள்
சொல்லுகிறது திராவிட மாடல்
ஆட்சி காவியத்தை !

பறவைகள் உதிர்க்கும் சிறகில்
ஆகாயம் வரைகிறது உன்
ஓவியத்தை !

கபடி விளையாட்டில் தாய்நாட்டு
எல்லை கோடு – நீ !

சாமானிய மக்களின் சக தோழர் – நீ !

சாலையோர
தேநீர் கடையில் சுவைஞர் – நீ !

புயலை எடுத்தாடும் காற்று
உன் பெயர் எழுதும் போரில் !

மயில் விரித்தாடும் தோகை
உன் வெற்றியை எழுதும் ஊரில் !

மதுரை கலைஞர் நூலகம்
ஜல்லிக்கட்டு மைதானம் பேசும்
உன் பெயரை
பாரில் !

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்
ஆக்கினாய்
பெரியார் வருகிறார் வெற்றி
தேரில் !

ஆடுகளும் சிறைபடும் புலிகளும்
சிறைப்படும் உன் ஆடு புலி
ஆட்டத்தில் !

தொடர்ந்து தோல்விகள் தான்
எதிரிகளுக்கு
உன் அரசியல் ஓட்டத்தில் !

மாணவர்களுக்கு கல்வி உதவி
வேங்கை கூட்டம் இயக்கம்
கருணை – நீ !

மாணவிகளுக்கு கல்வி உதவி
இளம் பெண்கள் வணங்கும்
அருணை – நீ !

பள்ளியில் காலை சிற்றுண்டி தரும்
உன்னை குழந்தைகள் அன்போடு
அழைக்கும் அப்பா – நீ !

பல்லாண்டு நலத்துடன் வாழ்க
அண்ணனாக
பிறந்த அப்பா – நீ !

**கவிஞர்**
**ஈரோடு இறைவன்**
*கழக இலக்கிய அணி இணைச் செயலாளர்*

